18 மாத தகவல் மடல்

18 months Tamil



# ஆரம்ப அறிவுரைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

உங்களது குழந்தை ஒவ்வொரு நாளும் புதிய திறன்களைச் செயல்படுத்துகிறார்.

உங்களது குழந்தை பொருட்களை ஒப்பிட்டுப் பார்க்கத் தொடங்குகிறது அத்துடன் அவற்றின் ஒற்றுமையையும் வேற்றுமையையும் அடையாளங் காண்கிறது.

எவ்வளவு கூடிய சொற்களை குழந்தைகள் செவிமடுக்கின்றனவோ அவ்வளவு கூடுதலாக அச் செற்களைக் கூறுவதற்கு பழக்கப் படுகிறார்கள்.

உங்களது குழந்தைக்கு சில இலகுவான அறிவுரைகளை விளங்கிக் கொள்ளவும் பழக்கமான பொருட்களை அடையாளங் காணவும் முடிகிறது.

கூர்ந்து ஆராய்வதன் மூலமும் தொடுவதின் மூலமும் உங்களது குழந்தை கற்கிறது.

உங்களது குழந்தை புத்தகங்களைத் தெரிவு செய்வதற்கு விரும்புவதோடு பக்கங்களைப் புரட்டவும் உங்களுக்கு உதவி செய்யும்.

உங்களது குழந்தை மற்றப் பிள்ளைகள் மத்தியில் இருப்பதை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கிறது.

## நீங்கள் இப்போ என்ன செய்ய முடியும்?

உங்களுடைய பிள்ளையுடன் சேர்ந்து பொருட்களைப் பார்வையிடவும், வார்த்தைகளுக்குச் செவிமடுக்கவும், வாசிப்பதற்கும் சில நேரத்தைச் செலவிடுங்கள்.

உங்களது பிள்ளை தொடும் பொருட்களைப் பெயரிட்டு அழையுங்கள்.

உங்களது பிள்ளைக்கு பாவனை செய்வதை உற்சாகப்படுத்தி மிருகங்களின் பெயர்களையும் அவற்றின் ஓசைகளையும் பழக்குங்கள்.

உங்களது உள்ளூர் நூல் நிலையத்தில் சிறந்த புத்தகங்கள், சங்கீதம் ஆகியவற்றை இரவல் வாங்க முடியுமா என்று பாருங்கள்.

புத்தகங்களிலும் உண்மையான வாழ்க்கையிலும்- பொருட்கள், உறவினர், நண்பர் மற்றும் மக்கள் ஆகியோரைக் கண்டுபிடியுங்கள்.

உங்களுக்கு தெரிந்த ராகங்கள் மற்றும் பாட்டுகள் ஆகியவற்றைப் பாடுவதன் மூலம் விநோதமடையுங்கள்.

தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தை ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலம் வரை வைத்துக் கொள்ளுங்கள்.

தடித்த தூரிகைகள் மற்றும் வண்ணம் தீட்டும் கோல்களை உங்களது பிள்ளைக்கு வரைவதற்கு கொடுங்கள்.

நீங்கள் உங்களது உள்ளூர் விளையாட்டுக் குழுவுடன் சேர்ந்து விட்டீர்களா?

## யார் உங்களுக்கு உதவி செய்ய முடியும்?

உறவினரும் நண்பர்களும்

உங்களது வைத்தியர் அல்லது சமூகத் தொழிலாளி, குழந்தை கவனிப்பு அல்லது விளையாட்டுக் குழு அலுவலர்கள்.

ஆரம்பச் சொற்கள் இணையத்தளம www.earlywords.info
உங்களது குழந்தைக்கு மேலதிகத் தேவைகள் இருந்தால் கூடுதலான யோசனைகளுக்கு உங்களது வைத்தியர், அல்லது குழந்தையின் பிரத்தியேக தொழிலாளி ஆகியவர்களைக் கேளுங்கள்.

## எதிர்பாருங்கள்

கூடுதலான தகவல் துணுக்குகள்- உங்களது குழந்தை 3 வயதடையும்போது

Early Words is a Children First project, funded by Families NSW ©